**மண்முனை பிரதேச சபை - 2022**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மண்முனை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானங்கள் மற்றும் செலவுகள் கணக்கு, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எமது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மண்முனை பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று உள்ளூராட்சி நிறுவனத்திற்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நான் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முனைப்பழியுள்ள அபிப்பிராயம் வெளிப்படுத்துகின்றேன்.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு செய்யப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள்,

பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதாரத் தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுக்ள மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

  இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும்

ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபையின் நிறுவனம் செயற்படுகின்றதா எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1) (ஈ) (iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் கடந்த வருடத்தை ஒத்திருந்தன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(i)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிராகரம் கடந்த வருடத்தில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் முன்வைக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டிற்கான உள்ளூராட்சி அபிவிருத்தி ஒத்துழைப்புச் செயற்திட்டத்தின் (LDSP) கீழான நிதி ஒதுக்கீட்டில் ரூபா 4.151 மில்லியன் ஒப்பந்தத் தொகையில் நிர்மாணிக்கப்பட்டு சபைக்கு கையளிக்கப்பட்ட கிரான்குளம் கிராமிய கடைத்தொகுதியானது கணக்குகளில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை | இதன் பெறுமதி 2023ம் ஆண்டிற்கான கணக்கறிக்கையில் வெளிப்படுத்தப்படும். | சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் களஞ்சிய அறையில் ரூபா 60,551 பெறுமதியிலான களஞ்சிய இருப்புக்கள் காணப்படுகின்ற போதிலும், அத்தொகை நிதிக்கூற்றுக்களில் சொத்தாக காட்டப்பட்டிருக்கவில்லை. | களஞ்சிய இருப்பின் பெறுமதி சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால் சொத்தாக வெளிப்படுத்தப்படவில்லை. | சொத்துக்கள் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |
| (இ) | சபையினால் நிர்வகிக்கப்படும் நூலகங்களுக்கு மீளாய்வாண்டின் இறுதிவரை நன்கொடையாகக் கிடைக்கப்பெற்ற 106 புத்தகங்களின் பெறுமதியான ரூபா 41,190 | எதிர்வரும் காலங்களில் இப்புத்தகங்களின் பெறுமதி கணக்குகளில் சேர்த்துக்கொள்ளப்படும். | நன்கொடைப் புத்தகங்கள் நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட |

| | | |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 69,475,965 பெறுமதியான 07 மீதிகளுடன் தொடர்புடைய நிலையான சொத்துப் பதிவேடு, உரிமையை உறுதிப்படுத்தும் பதிவேடுகள், முற்பணப் பதிவேடு மற்றும் ஏனைய பதிவேடுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | காணி கட்டடங்கள் பொறி, மோட்டர் வாகனங்கள், தளபாடங்கள் போன்ற நிலையான சொத்துக்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்கும் வாகனங்கள் உரிமையை மாற்றம் செய்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. | சொத்துக்களுக்கான எழுத்து மூலச் சான்றுகளை பெற்றுக்கொள்ளவும் பதிவேடுகளில் பதிவு செய்யவும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே தரப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | 1988 இன் பிரதேச சபை நிதி, நிர்வாக விதிகளிலுள்ள 59 ஆம் இலக்க விதி மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் உபபிரிவு 150(1) | --- | ஒவ்வோராண்டு தொடக்கத்திலும் வருமானப் பரிசோதகரால் அல்லது தவிசாளரினால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் பிரதேச எல்லைக்குள் அமையப்பெற்றுள்ள வியாபாரம் பற்றிய நிரலொன்று தயாரித்து குறித்த ஆண்டின் மார்ச் 31இற்கு முன்னர் சபைச் செயலாளரிடம் ஒப்படைக்கத் தவறியமையால், ஆண்டுக்கான வியாபார உரிமைக்கட்டணம் முழுமையாக அறவீடு செய்தல் தொடர்பில் உண்மைத் தன்மையினை கணக்காய்வின் போது | 2023ம் ஆண்டில் இருந்து தங்களின் அறிவுறுத்தலுக்கமைவாக இற்றைப்படுத்தப்படுகின்றது. | ஆண்டுக்கான வியாபார உரிமைக்கட்டணம் முழுமையாக அறவீடு செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உறுதிப்படுத்த
முடியவில்லை

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 18,381,968 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை மிகைத்த வருமானம் ரூபா 18,837,813 ஆகும்.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 2,210,000 | 3,242,960 | 3,280,635 | 525,197 | 2,100,000 | 5,919,359 | 3,544,211 | 562,872 |
| வாடகை | 9,644,600 | 9,378,800 | 8.083,000 | 1,861.447 | 6,573,760 | 5,534,947 | 4,267,825 | 565,647 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,895,000 | 1,507,250 | 1,554.690 | -- | -- | 1,789,585 | 1,789,585 | 47,440 |
| ஏனைய வருமானம் | 28,020,000 | 48,057,170 | 48,355,585 | 3,430,939 | 19,425,317 | 48,591,937 | 48,660,266 | 3,729,355 |
| | 41,769,600 | 61,186,180 | 61,273,910 | 5,817,583 | 28,099,077 | 61,835,828 | 58,261,888 | 4,905,314 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் அனைத்து வருமானங்களையும் சேகரிக்கும் செயலாற்றல் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **வாடகை** | | |
| (i) | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிட வேண்டிய வாடகை வருமானம் மற்றும் குத்தகை வருமானம் என்பன முறையே ரூபா 761,197 மற்றும் ரூபா 1,100,250 அறவிடப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்நிலுவைகளுக்கான காலப்பகுப்பாய்வு கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும், காலப்பகுப்பாய்வு தற்போது தயாரிக்கப்பட்டுள்ளது. | அறவிட வேண்டிய வாடகை மற்றும் குத்தகை வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**(ஆ) முத்திரைத் தீர்வைகள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்தும் 2022 திசெம்பர் 31 திகதியின் படி கிடைக்க வேண்டியிருந்த் முத்திரைக் கட்டணம் ரூபா 8,126,950 ஆகும்.. | முத்திரை தீர்வையினை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | முத்திரைத் தீர்வையினை பெற்றுக்கொள்வதற் கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | **கட்டிட அனுமதி** | | |
| **(i)** | 1992 செப்தெம்பர் 30 ஆம் திகதியிடப்பட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயக அலுவலகத்தின் பிரதி பணிப்பாளர் நாயகத்தினால் வெளியீடு செய்யப்பட்ட பொதுச் சுற்றறிக்கை இல.1769 இன் பிரகாரம், பொதுச்சுகாதாரப் பரிசோதகரினால் கட்டிடத்தின் கீழ்த்தளத்திற்கு மட்டுமே படம் வரைய முடியும். எனினும், மீளாய்வாண்டில் 02 மாடி கொண்ட 03 கட்டடங்களுக்கான வரைபடமானது பொதுச்சுகாதாரப் பரிசோககரினால் வரையப்பட்டு இச்சுற்றறிக்கைக்கு முரணான வகையில் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. | பொது சுற்றறிக்கை இல. 1769 இன் பிரகாரம், உரிய அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம், நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ii)** | சுகாதார அமைச்சினால் வெளியிடப்பட்ட பொதுச்சுகாதாரப் பரிசோதகர்களுக்கான கையேட்டின் அத்தியாயம் 04இன் பிரிவு 4.2 மற்றும் 1987 ஆண்டு 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி சட்டத்தின் பிரகாரமும், கட்டிடங்கள் அமைக்கப்படும் போது கட்டிடமானது சுகாதார காற்றோட்டமுள்ளதாக காணப்படுகின்றதா என பொதுச்சுகாதாரப் பரிசோதகரினால் அறிக்கையிடப்பட்ட பின்னரே கட்டிட அனுமதி வழங்கப்பட வேண்டும். எனினும், மீளாய்வாண்டில் 16 கட்டிட விண்ணப்பங்களுக்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் அறிக்கை பெறப்படாமல் கட்டடம் கட்டுவதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | இனிவரும் காலங்களில் காலதாமதம் ஏற்படாமல் கட்டட விண்ணபப்படிவங்கள் பொதுச் சுகாதாரப் பரிசோதகரின் சிபாரிசுக்கு அனுப்பப்படும். | கட்டட விண்ணப்பங்களுக்கு பொதுச்சுகாதாரப் பரிசோதகரின் அறிக்கையினைப் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| **(ஆ)** | சபைக்குச் சொந்தமான 62 காணிகளின் பெறுமதிகள் மதிப்பிடப்பட்டு கணக்குகளில் சொத்தாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | காணிகளின் பெறுமதி இதுவரையில் மதிப்பிடப்படாத காரணத்தினால் கணக்குகளில் சொத்தின் பெறுமதி தனியாக காட்டப்படவில்லை. | காணிகள் சொத்தாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| சபையினால் பயன்படுத்தப்படுகின்ற 09 வாகனங்கள், 02 உழவு இயந்திர இழுவைப் பெட்டிகள் மற்றும் 01 தண்ணீர் பவுசர் என்பவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபையில் பயன்படுத்தப்படுகின்ற வாகனங்களை உரிமை மாற்றம் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | வாகனங்களின் உரிமை மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய பெறுகை வழிகாட்டியின் பிரிவு 4.2.1 இன் பிரகாரம் மற்றும் தேசிய பாதீட்டு திணைக்களத்தின் 2006 மார்ச் 26 ஆந் திகதிய 128 ஆம் இலக்க சுற்றறிக்கையின் பிரகாரம், வழங்கல்கள் செயற்பாடுகளுக்கான பெறுகைகள் திட்டமானது சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டம் தயாரிக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | வழங்கல்கள் செயற்பாடுகளுக்கான பெறுகைகள் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| **ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்**<br>முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அனுமதிக்கப்பட்ட ஆளணி பட்டியல்களுக்கமைய, சபையில் காணப்படும் 08 பதவிகளுக்கு 11 வெற்றிடங்களும், 06 ஊழியர்கள் மேலதிகமாகவும் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இதனை சீர்செய்வதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மாதாந்தம் ஆளணி விபரம் பிராந்திய பற்றிய அறிக்கையானது உள்ளூராட்சி அலுவலகம் மற்றும் உதவி உள்ளூராட்சி அலுவலகம் என்பவற்றிற்கு அனுப்பப்படுகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிக ஊழியர்களை சீர் செய்வதற்குமான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாட்சியும்

### 4.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க கணக்காய்வுச் சட்டத்தின் 16(2) உப பிரிவிற்கமைய வருடாந்த | இனிவரும் காலங்களில் செயலாற்றல் அறிக்கை | வருடாந்த செயலாற்றல் |

| | | |
|---|---|---|
| செயலாற்றல் அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | அறிக்கை நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

**4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|
| வருடாந்த பாதீட்டின் பிரகாரம், சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த 31 நடவடிக்கைகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தங்களது ஆலோசனைகளுக்கமைய எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்படும். | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4.3 சுற்றாடல் பிரச்சினை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | சிபார்சுகள் |
|---|---|---|---|
| **(அ)** | 1988 இன் 56 ஆம் இலக்க, 2000 இன் 53 ஆம் இலக்க சட்டம் மற்றும் 2008 இன் 01 ஆம் இலக்க சட்டத்தினாலும் திருத்தப்பட்ட, 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டம் மற்றும் 2022 சனவரி 27ஆம் திகதியிடப்பட்ட 2264/18 ஆம் இலக்க விஷேட வர்த்தமானியின் ‘‘ஆ’’ பிரிவின் பிரகாரம், கீச்சான் பள்ளத்தில் அமைந்துள்ள மாடு அறுக்கும் இடத்திற்கான சுற்றாடல் அனுமதிப்பத்திரம் சபையினால் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த இடத்திலுள்ள கழிவுகள் முறையாக அகற்றப்பட்டிருக்கவில்லை. இதன்காரணமாக, மாடு அறுக்கும் இடம் அமைந்துள்ள சுற்றாடல் பகுதிகளில் துர்நாற்றம் வீசக்கூடியவாறு காணப்படுகின்றது. | எதிர்காலத்தில் இது தொடர்பில் கவனம் செலுத்தப்படும். | சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| **(ஆ)** | ஆரையம்பதி பொதுச்சந்தையில் நாளாந்த வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடும் ஆண் மற்றும் பெண் வியாபாரிகளுக்கு 06 மலசல கூடங்கள் அமைக்கப்பட்டுள்ள போதிலும், 1987 இன் 15ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 85(இ)ஆம் பிரிவின் பிரகாரம், மலசலகூடங்களை பேணுவதற்கான நடவடிக்கை சபையினால் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, 04 மலசலகூடங்கள் பாவனை செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றன. | பொதுமலசல கூடங்கள் பாவனைக்கு உகந்த முறையில் மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு 75% மான வேலைகள் பூரணப்படுத்தப்பட்டுள்ளது. | மலசலகூடங்களை பேணுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |